அ.வ.எண்: 50/2016 நாள்: 20.04.2026

வா.சா – 3– மாரிமுத்து

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**<u>1,3,4,5, பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. தாவா சொத்து காளியம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், அதனை எனது மனைவி அடமானம் பெற்றார் என்றும் சொன்னால் சரிதான். பொதுவாக ஒரு சொத்தை அடமானம் வைத்திருந்தால் அடமானத் தொகையை கேட்டு தான் வழக்கு தாக்கல் செய்ய முடியும் என்றால், நாங்கள் அடமானத் தொகையை கேட்டோம், ஆனால் அவர்கள் கொடுக்கவில்லை. அடமான தொகையை திரும்ப கொடுக்கும்படி பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்து உள்ளேனா என்றால் இல்லை. அடமான தொகையை திரும்பி செலுத்தி விட்டு அடமானத்தை ரத்து செய்யும்படி எனது மனைவி ஏதும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி சட்ட நடவடிக்கை எடுத்தாரா என்றால் இல்லை. அடமான தொகையை திருப்பி செலுத்தினால் எங்களுக்கு போதுமா என்றால் இல்லை, எங்களுக்கு சொத்து தான் வேண்டும் நாங்கள் 40 வருடமாக அதை அனுபவித்து வருகிறோம்.

2. நான் தாக்கல் செய்துள்ள அடமான பத்திரத்தில் எங்கேயாவது தாவா சொத்தின் சுவாதீனத்தை எங்கள் வசம் ஒப்படைப்பதாக எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை, அவர்கள் சொத்தை எங்களிடம் தரவில்லை காசை திரும்ப தரவில்லை. வா.சா.ஆ.1 ஆவணமானது அடமான வட்டி கடன் பத்திரம் தான் என்றும், அதை வைத்து அடமான தொகையை வட்டியுடன் திரும்ப செலுத்தும் படி கேட்டு தான் வழக்கு தாக்கல் செய்ய முடியுமே தவிர எனக்கு உடைமை இல்லாத ஒரு சொத்து குறித்து உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி அடமான கடன் பத்திரத்தில் கண்டுள்ள அசல் தொகையை வட்டியுடன் சேர்ந்து செலுத்த பிரதிவாதி வகையறா தயாராக இருப்பதாகவும், நானும் வாதியும் தான் அதை வாங்க மறுத்து வீண்விவகாரம் செய்து வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும் சொன்னால் சரியல்ல.

3. பிரதிவாதி வகையறாக்கள் அடமானத் தொகை அசல் மற்றும் வட்டியுடன் சேர்த்து திரும்பி செலுத்த வந்ததாகவும், அதனை வாதியாகிய நாங்கள் வாங்க மறுத்து அவர்களின் அனுபவத்தை தடை செய்யும் பொருட்டு அவர்களை தாக்கியதாக கூறினால் சரியல்ல. பிரதிவாதியை நாங்கள் தாக்கியது சம்பந்தமாக புகார் பதிவு செய்யப்பட்டு, தேவகோட்டை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் எங்களை குற்றவாளியாக

அறிவித்தனர் என்றால் சரியல்ல. தாவா சொத்து எனது உடமையிலும் எனது மனைவியின் உடமையிலும் இல்லை என்பது நன்றாக தெரிந்தும் உடமையில் இல்லாத சொத்து சம்பந்தமாக நிலைக்கால உறுத்து கட்டளை பரிகாரம் கேட்க முடியாது என்பது தெரிந்தும், தாவாசொத்தை அபகரிக்கும் நோக்கத்தோடு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாக கூறினால் சரியல்ல. வழக்கின் நோக்கம் நசிந்து விட்டது என்றும் அதனால் நான் இந்த பரிகாரம் கேட்க முடியாது என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை**

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.04.20 14:38:05 +0530